நீங்கள் கோக்ளியர் இம்ப்ளான்ட் பற்றி நினைக்கிறீர்களா?

கோக்ளியர் இம்ப்ளான்ட் உங்களுக்கு உதவுமா என்று யோசிக்கும் பெரியவர்களுக்கான ஒரு வழிகாட்டி.

கோக்ளியர் இம்ப்ளான்ட் என்றால் என்ன?


கோக்ளியர் இம்ப்ளான்ட் என்பது கேட்க உதவும் ஒரு கருவி. இது கடுமையான அல்லது மிகக் கடுமையான கேள்வித்திறன் இழப்பு உள்ளவர்களுக்கு பயன்படும். ஹியரிங் ஏய்ட்கள் (hearing aids) போதுமான உதவி செய்யாதபோது இது உதவும்.

இது ஹியரிங் ஏய்ட்களிலிருந்து வேறுபட்ட முறையில் வேலை செய்கிறது. சத்தத்தை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக, சத்தத்தை மின்-வேதியியல் சமிக்ஞைகளாக (electrochemical signal) மாற்றி, அவற்றை நேராக கேள்வி நரம்பிற்கு அனுப்புகிறது.

கோக்ளியர் இம்ப்ளான்டில் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளன:

• **உள் பகுதி (இம்ப்ளான்ட்)** – அறுவை சிகிச்சை மூலம் காதுக்கு பின்புறம் உள்ள பகுதியில், தோலின் கீழ் வைக்கப்படுகிறது. இதனுடன் கூடிய மெல்லிய கம்பி (மின்முனை கற்றை – electrode array) உட்செவிக்குள் பொருத்தப்படும். இந்த மெல்லிய கம்பி (மின்முனை கற்றை) உள் காதில் இருந்து கேள்வி நரம்பிற்கு சமிக்ஞைகளை அனுப்புகிறது

• **வெளிப்புற சவுண்ட் ப்ராசஸர் (ஒலி செயலாக்கி)** – இது காதின் பின்புறத்தில் ஹியரிங் ஏய்டைப் போல அணியப்படுகிறது. இது இம்ப்ளான்டுடன் ஒட்டிக்கொள்ள ஒரு காந்தம் (magnet) கொண்டுள்ளது









இது எனக்கு பொருத்தமா?

இந்த கருவி உங்களுக்கு உதவக்கூடும்:

- உங்கள் இரண்டு காதுகளிலும் கடுமையான அல்லது மிகக் கடுமையான கேள்வித்திறன் (செவித்திறன்) இழப்பு (hearing loss) இருந்தால்
- நல்ல ஹியரிங் ஏய்ட்கள் இருந்தாலும் பேசுபவற்றை புரிந்துகொள்ள சிரமமாக இருந்தால் – குறிப்பாக தொலைபேசியில் அல்லது குழுவாக கூடியிருப்பவர்களோடு உரையாடும் போது

கோக்ளியர் இம்ப்ளான்ட் பயன்படுத்தும் பலர் கூறுவது:

- அவர்கள் உதடு வாசிப்பை (lip reading) குறைவாக பயன்படுத்துகிறார்கள்
- உரையாடல்களைப் புரிந்து கொள்வது எளிதாகிறது, குறிப்பாக ஒருவருடன் பேசும்போது
- முன்பு கேட்காத சத்தங்களை கேட்க முடிகிறது – பறவைகள் குரல், காலடி சத்தம் அல்லது அலாரம் போன்றவை

நான் மேலும் தெரிந்து கொள்ள விரும்பினால் என்ன நடக்கும்?

கோக்ளியர் இம்ப்ளான்ட் மதிப்பீட்டிற்காக உங்களை அனுப்புவது, நீங்கள் கண்டிப்பாக இம்ப்ளான்ட் செய்ய வேண்டும் என்பதல்ல. இது உங்களுக்கு பொருத்தமா என்பதை தெரிந்துகொள்ளும் ஒரு வாய்ப்பு.

1. முதல் சந்திப்பு

நீங்கள் கோக்ளியர் இம்ப்ளான்ட் குழுவில் உள்ள சிலரை சந்திப்பீர்கள். அவர்கள் உங்கள் கேள்வித்திறனை சோதித்து, உங்கள் பிரச்சினைகள் மற்றும் நீங்கள் எதிர்பார்ப்பது பற்றி பேசுவார்கள்.

2. மேலும் பரிசோதனைகள்

முதல் சந்திப்பில் இது உங்களுக்கு பொருத்தமாக இருக்கலாம் என்று தெரிந்தால், மேலும் சில நேர்முகங்கள் ஏற்பாடு செய்யப்படும். இதில்:

- o கூடுதல் கேள்வித்திறன் சோதனைகள்
- o ஸ்கேன் (உதா: MRI அல்லது CT)
- o நிபுணர்களுடன் சந்திப்பு – உதாரணமாக ஆடியாலஜிஸ்ட், மறுவாழ்வு நிபுணர் மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்

3. முடிவு எடுப்பது

நீங்கள் முடிவு எடுக்க உதவி பெறுவீர்கள். அவசரம் எதுவும் இல்லை – நீங்கள் நேரம் எடுத்துக் கொள்ளலாம். இப்போது "இல்லை" என்று சொல்லியும், பின்னர் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளலாம்.

இன்னும் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்?

• அறுவை சிகிச்சை பொதுவாக எளிதானது மற்றும் பொதுமயக்க மருந்தில் (நீங்கள் தூங்கும் நிலையில்) செய்யப்படுகிறது

• சில நேரங்களில் ஓரிடவுணர்ச்சிநீக்கி மயக்க மருந்தில் (நீங்கள் விழித்திருக்கும்போது) செய்யலாம். உங்களுக்கு எது சிறந்தது என்று மருத்துவருடன் பேசுவீர்கள்

• பெரும்பாலான பெரியவர்கள் NHS மூலம் ஒரு இம்ப்ளாண்ட் பெறுகிறார்கள் (நீங்கள் காது கேளாதவராகவும் பார்வையற்றவராகவும் இருந்தால் இரண்டு வழங்கப்படும்)

• அறுவை சிகிச்சைக்குப் பிறகு, மீண்டும் வருகை (follow-up) சந்திப்புகள் மற்றும் இம்ப்ளான்ட் மூலம் கேட்க கற்றுக்கொள்ள உதவி தேவைப்படும் – இதற்கு நேரம், முயற்சி மற்றும் பயிற்சி தேவைப்படும்

• ஒவ்வொருவரின் அனுபவமும் வேறுபடும். ஆரம்பத்தில் சத்தங்கள் வித்தியாசமாக, ரோபோட்டைப் போல (இயந்திரத்தனமாக) அல்லது எதிரொலியுடன் இருக்கலாம். இது சாதாரணம்

காலப்போக்கில், உங்கள் மூளை புதிய சத்தங்களைப் புரிந்துகொள்ள கற்றுக்கொள்ளும். பலர் பயிற்சிக்குப்பின் காலப்போக்கில் கேட்கும் சத்தம் தெளிவாகவும் இயல்பாகவும் ஆகிறது என்று கூறுகிறார்கள்

• இரைச்சலான இடங்களில் கேட்க இன்னும் சிரமமாக இருக்கலாம், ஆனால் காலப்போக்கில் இது எளிதாகும்

கோக்ளியர் இம்ப்ளான்ட் உடன் தினசரி வாழ்க்கை

• **தொலைபேசி மற்றும் இசை** – பெரும்பாலான சவுண்ட் ப்ராசஸர்கள் Bluetooth அல்லது சிறப்பு சாதனங்கள் மூலம் தொலைபேசி, டிவி அல்லது இசையுடன் இணைக்க முடியும். பயிற்சியுடன் பலர் மீண்டும் தொலைபேசி உரையாடல் மற்றும் இசை கேட்கவும் முடிகிறது

• **தண்ணீர் மற்றும் வானிலை** – இவை தண்ணீர் எதிர்ப்பு தன்மை கொண்டவை மற்றும் பலவற்றிற்கு நீர்ப்புகா கவர் உள்ளது. இதைப் பற்றி உங்கள் குழுவிடம் கேட்கலாம்

• **ப்ராசஸரை அணிதல்** – இது பகலில் ஹியரிங் ஏய்டைப் போல அணியப்படுகிறது. குளிக்கும் போது மற்றும் தூங்கும் போது கழற்ற வேண்டும்

பொதுவான கேள்விகள்

அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடனே கேட்க முடியுமா?
இல்லை – பொதுவாக 1 முதல் 4 வாரங்களுக்குப் பிறகு, காயம் ஆறியதும் இம்ப்ளாண்ட் இயக்கப்படுகிறது

இது மூளை அறுவை சிகிச்சையா?
இல்லை – இம்ப்ளாண்ட் உள் காதில் வைக்கப்படுகிறது, மூளையில் அல்ல

நான் MRI ஸ்கேன் செய்யலாமா?
ஆம் – பெரும்பாலான நவீன இம்ப்ளாண்ட்கள் MRI-க்கு பொருத்தமானவை, ஆனால் நீங்கள் எப்போதும் மருத்துவ குழுவிடம் சொல்ல வேண்டும்

மூத்தவர்கள் இம்ப்ளாண்ட் பெற முடியுமா?
ஆம் – 80 மற்றும் 90 வயதுடையவர்களும் வெற்றிகரமாக இம்ப்ளாண்ட் செய்து நல்ல பலன் பெற்றுள்ளனர்

மேலும் அறிய:

• British Cochlear Implant Group
www.bcig.org.uk

• Hear Together
www.heartogether.org.uk

• National Cochlear Implant Users Association
www.nciua.org.uk